# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

## PART - III EXAMINATION IN BUSINESS ADMINISTRATION/ COMMERCE 2000/ 2001

## BBA/ COM 401 (A) AUDITING

ஏதாயினும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 02 மணித்தியாலங்கள்

01. (a) இலங்கை கணக்காய்வு நியமம் 1 இற்கு (SLAuS 1) இணங்க நிறுவனம் ஒன்றின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வினை தழுவிநிற்கும் அடிப்படை அல்லது பொது கோட்பாடுகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(b) பணிக்கமர்தல் கடிதத்தின் (Letter of Engagement) நோக்கத்தினையும் அதன் பிரதான உள்ளடக்கங்களையும் விளக்குக. (05 புள்ளிகள்)

(c) புதிய கணக்காய்வினைத் திட்டமிடுவதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் எவை எனத் தருக. (04 புள்ளிகள்)

(d) கணக்காய்வின் விசாலம் (scope of audit) என்பதன் கருத்து என்ன? கணக்காய்வு விசாலத்திற்கு வரையறைகள் எவ்வாறு ஏற்படலாம் என விளக்குக. (05 புள்ளிகள்)

(e) உள்ளகக் கணக்காய்வாளரின் ஆறு கடமைகளை நிரல்படுத்துக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02. கணக்காய்வாளர் போதுமானதும் தகுதிவாய்ந்ததுமான (sufficient and competent) கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கணக்காய்வு சான்றுகள் தொடர்பான கணக்காய்வு நியமத்தில் கூறப்பட்டுள்ளது.

(a) கணக்காய்வு சான்று என்றால் என்ன என்பதனை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(b) கணக்காய்வு சான்றுகளின் போதுமான தன்மையினை நிர்ணயிப்பதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய நான்கு காரணிகளைத் தருக. (04 புள்ளிகள்)

(c) கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(d) கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதில் கட்டுப்பாட்டு சோதனைகள் (test of control) மற்றும் உறுதிப்படுத்தல் நடைமுறைகள் (substantive procedure) பற்றி விளக்குக. (06 புள்ளிகள்)

LIBRARY

(e) பகுப்பாய்வு மீளாய்வு நடைமுறைகள் என்றால் என்ன என்பதனை விளக்குவதுடன் கணக்காய்வு திட்டமிடலிற்கு இதன் முக்கியத்துவம் என்ன என்பதனைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

03. (a) சான்றாய்வு / (vouching) அல்லது செலவினக் கணக்காய்வு (expenditure audit) என்றால் என்ன?

**(02 புள்ளிகள்)**

(b) கீழ் தரப்பட்டுள்ள ஒவ்வொன்றினையும் சான்றாய்வு செய்வதில் அவதானிக்கப்படும் முக்கிய விடயங்கள் இரண்டினை நிரல்படுத்துக.

(i) ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்
(ii) கடனுக்கு செலுத்திய வட்டி
(iii) மூலப்பொருள் கொள்வனவு செய்த கிரயம்
(iv) சம்பளமும் கூலிகளும்

**(08 புள்ளிகள்)**

(c) பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை கணக்காய்வாளரான நீர் எவ்வாறு மெய்மையாய்வு செய்வீர்?

(i) பொறியும் இயந்திரமும் 1.5 மில்லியன்
(ii) மோட்டார் வாகனங்கள் 02 மில்லியன்
(ii) நீண்டகாலக் கடன்கள் 01 மில்லியன்

**(06 புள்ளிகள்)**

(d) (i) கணக்காய்வு திட்டமிடல் என்பதன் கருத்து என்ன?
(ii) கணக்காய்வு நிகழ்ச்சி நிரலினை (audit programme) பயன்படுத்துவதனால் ஏற்படும் நான்கு (04) நன்மைகளையும் தீமைகளையும் தருக.

**(06 புள்ளிகள்)**

(e) மோசடிகள் (fraud) மற்றும் வழுக்கள் (error) என்ற பதங்களை வேறுபடுத்துக.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

04. (a) இலங்கை கணக்காய்வு நியமம் 26 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கணக்காய்வு அறிக்கையின் பிரதான மூலகங்கள் (main elements of the audit report) எவை?

**(05 புள்ளிகள்)**

(b) பாதகமான அபிப்பிராம் (adverse opinion) கருத்துரிமை மறுக்கும் அபிப்பிராயம் (disclaimer of opinion) என்ற பதங்களின் மூலம் நீர் என்ன விளங்குகின்றீர்?

**(04 புள்ளிகள்)**

(c) எத்தகைய சூழ்நிலைகளில் கணக்காய்வாளர் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தினை (unqualified opinion) வெளிப்படுத்த முடியும் எனக் கூறுக.

**(04 புள்ளிகள்)**

(d) பின்வரும் தொடர்புகளுக்கிடையேயான வேறுபாட்டினை சுருக்கமாக விளக்குக.

(i) கணக்காய்வு நியமங்களும் கணக்காய்வு நடைமுறைகளும் (Auditing Standards and Auditing Procedure)

(ii) உள்ளகக் கட்டுப்பாடுகளும் உள்ளக செவ்வையும் (Internal Controls and Internal Check)

(iii) நேர்முறையான உறுதிப்படுத்தலும் எதிர்மறையான உறுதிப்படுத்தலும் (Positive and Negative Confirmation)

(iv) நிதிக் கணக்காய்வும் முகாமைக் கணக்காய்வும் (Financial Audit and Management Audit)

(08 புள்ளிகள்)

(e) சொத்துக்களை மெய்மையாய்வு செய்யும் போது உள்ளடக்கப்பட வேண்டிய அல்லது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

5. (a) (i) உள்ளகக் கட்டுப்பாடு முறைமைக்கு வரைவிலக்கணம் தருக.

(ii) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் குறிக்கோள்கள் நான்கு (04) தருக.

(06 புள்ளிகள்)

(b) (i) ஆவணப்படுத்தல் (documentation) என்பதன் கருத்து என்ன?

(ii) கணக்காய்வு வேலைத் தாள்களின் (audit working papers) நான்கு (04) குறிக்கோள்களைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(c) கம்பனி ஒன்றின் நிரந்தர கணக்காய்வு கோவையில் (permanent audit file) வழமையில் வைத்துக் கொள்ளப்படும் ஐந்து வகையான தகவல்களைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(d) நோக்கங்கள், அதிகாரங்கள் என்பவற்றை உள்ளடக்கி இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்புச் சபை (Sri Lanka Accounting and Auditing Standards Monitoring Board) பற்றிய குறிப்பினைத் தருக.

(04 புள்ளிகள்)

(e) இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகள் மற்றும் அதிகாரங்களைச் சுருக்கமாக கூறுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

LIBRARY
04 MAR 2008
Eastern University, Sri Lanka